விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 276 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 04 வெள்ளிக்கிழமை (20.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## வாக்கு உங்கள் உரிமை

# கட்டாயம் பயன்படுத்துக



### பொதுமக்களிடம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்



(கொழும்பு)

வாக்கு உங்கள் உரிமை. அது உங்கள் பலம். அதனைக் கட்டாயம் பொதுமக்கள் பயன்படுத்த வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.போதனாவில் பால் புரைக்கேறியதில் 12 நாட்களான சிசு மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் 12 நாட்களேயான ஆண் சிசு ஒன்று மரணமடைந்துள்ளது.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த தம்பதிகளுக்கு கடந்த எட்டாம் மாதம் 31 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் ஆண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

பிறந்த குழந்தை நிறைகுறை காரண 15

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் இன்று வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தேர்தல் ஆணைக்குழு விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பு நிலைய நடவடிக்கைகளுக்குத் தேவையான மேசைகள், 15

## தேர்தல் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் நாளை 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. 15

## தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பு அதிகரிப்பு

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர்




(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே 16

## பிறந்து இரு நாட்களேயான சிசு மரணம்

(யாழ்ப்பாணம்)

பிறந்து இரண்டு நாட்களேயான பெண் சிசு ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளது.

நாவாந்துறையைச் சேர்ந்த தம்பதியருக்கு கடந்த 17ஆம் திகதி 15

## தொகுதி மட்டத்தில் நிறுவப்பட்ட தேர்தல் அலுவலகங்களை நீக்குக

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

தொகுதி மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள அனைத்துத் தேர்தல் அலுவலகங்களையும் நள்ளிரவுக்கு முன்னர் நீக்குவது அவசியம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் 15

## 21, 22ம் திகதி மதுச்சாலைக்கு பூட்டு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு செப்ரெம்பர் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் நாடு முழுவதிலும் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலை 15

## டிப்பர் மோதியதில் இளைஞன் உயிரிழப்பு

### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் டிப்பர் மோதியதில் இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் பன்னங்கண்டி பகுதியைச் சேர்ந்த அந்தோனி அல்பிரட் அனுஷன் (வயது-22) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி செல்லும் வீதியின் பன்னங் 15

## யாழ்.மாவட்டத்தில் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

### பதில் மாவட்டச் செயலர் பிரதீபன்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் பதில் மாவட்டச் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார். 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களிடம்

# கடன் மறுசீரமைப்பிற்கு கொள்கை ரீதியில் இணக்கம்



2023 ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட இலங்கையின் 17.5 டொலர் பில்லியன் தனியார் வணிகக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பிலான இணக்கப்பாடு நேற்று வியாழக்கிழமை எட்டப்பட்டது.

சர்வதேச முதலீட்டாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் (Ad Hoc Group of Bondholders - AHGB) மற்றும் உள்நாட்டு நிதி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் (Local Consortium of SriLanka - LCSL) கூட்டு நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையிலான கலந்துரையாடலின் பின்னர், தனியார் பிணைமுறி வழங்குநர்களுடனான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இந்நாட்டின் தனியார் பிணைமுறிகளில் 50% இற்கும் அதிகமானவற்றை இந்தக் குழுக்கள் கொண்டுள்ளன.

இந்த இணக்கப்பாடுகளுக்கமைய பிணைமுறிதாரர்கள் 11% தள்ளுபடி விகிதத்தின் அடிப்படையில் தற்போதைய கடன் பெறுமதியில் 40.3% தள்ளுபடியை வழங்க இணங்கியுள்ளனர். இந்த இணக்கப்பாடுகளுக்கு அமைய, 2024 ஜூலை மாதம் ஸ்தாபிக்கப்பட்ட ஒருங்கிணைந்த செயற்பாட்டு வரைவை விடவும் பெருமளவான கடன் சலுகை இலங்கைக்கு கிடைக்கவுள்ளதோடு, புதிய நிபந்தனைகள் அடிப்படையில் வட்டிக் கொடுப்பனவிலும் குறைப்புச் செய்யப்படும்.

இலங்கை 3.3 பில்லியன் டொலர் தனியார் கடனை மறுசீரமைப்பு செய்வதற்கான நிதி நிபந்தனைகள் தொடர்பில் சீன அபிவிருத்தி வங்கியுடன் (CDB) கொள்கைரீதியான இணக்கப்பாட்டினை எட்டியுள்ளது.

சீன எக்ஸிம் வங்கி, ஸ்ரீலங்கா உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழு (OCC), சீன அபிவிருத்தி வங்கி (CDB) மற்றும் பிணைமுறிதாரர்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் பலனாக, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்ட காலப்பகுதிக்குள் இலங்கை 17 டொலர் பில்லியனுக்கும் அதிகமான கடன் சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதில் சீன எக்ஸிம் வங்கியின் 2.4 டொலர் பில்லியன்களும், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவின் 2.9 டொலர் பில்லியன்களும், சீன அபிவிருத்தி வங்கியின் (CDB) 2.5 டொலர்பில்லியன்களும், பிணைமுறிதாரர்களின் 9.5 டொலர் பில்லியன்களும் அடங்கும்.

இந்த செயன்முறை முழுவதிலும் இலங்கையின் கடன் வழங்குநர்களும் சர்வதேச நாணய நிதியமும், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களின் செயலகமும் வழங்கிய தொடர்ச்சியான ஒத்துழைப்பிற்கு இதன்போது ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். (ம-7)

## உணவு ஒவ்வாமை 500 ஊழியர்கள் வைத்தியசாலையில்

(பொலநறுவை)

பொலநறுவை - பகமூன பகுதியில் உள்ள தனியார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் வழங்கப்பட்ட உணவு ஒவ்வாமை காரணமாக 500 ஊழியர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பகமூன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆடைத்தொழிற்சாலையில் வழங்கப்பட்ட உணவை உட்கொண்டதன் பின்னரே இவர்கள் சுகவீனமடைந்துள்ளதாக பகமூன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஊழியர்கள் பகமூன வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக பகமூன பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இளைஞன் ஒருவர் கைது

(மட்டக்களப்பு)

சுங்கவரி செலுத்தாமல் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இளைஞன் ஒருவன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று(19) கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் அபுதாபியிலிருந்து நேற்று வியாழக்கிழமை (19) கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரிடமிருந்து 5 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 25 சிகரெட்டு பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டு நாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் கல்யாண மாலை

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-

கல்யாண மாலை

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email : kalyanamalai.jaffna@gmail.com


## புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்த தயங்கோம்

### பரீட்சை ஆணையாளர் நாயகம்

புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்த தயங்கோம் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குள்ளாகியுள்ள ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளை இரத்துச் செய்வது தொடர்பில் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பில், தொடர்ந்தும் ஆராய்ந்து இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான அனுமானங்களின் அடிப்படையிலான வினாத்தாள் ஒன்று வட்ஸ்அப் ஊடாக பகிரப்பட்டிருந்தது.

குறித்த வினாத்தாளிலிருந்த சில கேள்விகள், அண்மையில் நடைபெற்று முடிந்த புலமைப்பரிசில் பரீட்சையில் வழங்கப்பட்ட வினாத்தாளிலிருந்த சில கேள்விகளுக்கு இணையாகவுள்ளதாகப் பெற்றோர் குற்றம் சாட்டியிருந்தனர்.

இதனையடுத்து புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் பகுதியிலிருந்து 3 வினாக்களை நீக்கப் பரீட்சை திணைக்களம் தீர்மானித்தது.

எனினும் இந்த தீர்மானத்தினால், தமது பிள்ளைகளுக்கு அநீதி இழைக்கப்படுவதாக, பெற்றோர்கள் நேற்று முன்தினம் கொழும்பு, அநுராதபுரம், கேகாலை உள்ளிட்ட இடங்களில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் குழுவொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டது.

அதன் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், கருத்துரைத்த பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில், விசாரணை இடம்பெற்று வருகின்றது.

விசாரணை நிறைவில் உரிய வினாத்தாள் கசிந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டால், மீண்டும் பரீட்சையை நடத்தத் தயங்கப் போவதில்லை எனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார். (ம-7)


மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும்.

(C-1215)

தொடர்புகளுக்கு:

076 315 6470


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அனர்த்தங்களை எதிர்கொள்ள தயார்!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

**நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் வாக்குப்பதிவு காலத்தின் போது எதிர்பாராத வானிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களை எதிர் கொள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**




அத்துடன் அனர்த்த நிலைமைகள் ஏற்படக்கூடும் எனச் சந்தேகிக்கப்படும் மாவட்டங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அதன் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இன்று முதல் மூன்று மணிநேரத்திற்கு ஒருமுறை வளி மண்டலவியல் திணைக்களத்திடம் இருந்து வானிலை அறிக்கை பெறப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். இதேவேளை அனர்த்தங்கள் காரணமாக ஜனாதிபதித் தேர்தலுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளை நிர்வகிப்பதற்கான விசேட கூட்டு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த அனர்த்த முகாமைத் துவ மத்திய நிலையம் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

அதன்படி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சமூக ஊடகங்கள் தொடர்பில் தீவிர அவதானம் செலுத்தப்படும்

## பிரதிப் பொலிஸ் மா அதிபர்



(கொழும்பு)

சமூக ஊடகங்கள் தொடர்பில் தீவிர அவதானம் செலுத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார்.

தேர்தல் நாட்களிலும் தேர்தலுக்குப் பின்னரும் சமூக ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்கள் ஊடாக நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் செயற்பட்டால் அதற்குரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்

அதற்கமைய குறிப்பாக கணனி குற்றப் புலனாய்வுப் பிரிவு தனியான சேவை ஆரம்பித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சமூக ஊடகங்கள் ஊடாக எந்தவொரு தகவல் கிடைத்தாலும் அவதானம் செலுத்துமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவா பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## பஞ்சாப் கிங்ஸுடன் கைகோர்த்த பொண்டிங்




2025 இந்தியன் பிரீமியர் லீக் சீசனுக்கான பஞ்சாப் கிங்ஸ் அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக ரிக்கி பொண்டிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு டில்லி கப்பிட்டல்ஸிலிருந்து அவர் வெளியேறியதைத் தொடர்ந்து. டில்லி உரிமையுடனான ஏழு ஆண்டுகால பணியை முடித்தார்.

முன்னாள் அவுஸ்திரேலிய நட்சத்திரம் பஞ்சாப் கிங்ஸுடன் பல ஆண்டு ஒப்பந்தத்தில் கையெ முத்திட்டார்.

கடந்த சீசனின் பயிற்சியாளர்களான ட்ரெவர் பெய்லிஸ் (தலைமைப் பயிற்சியாளர்), சஞ்சய் பாங்கர் (கிரிக்கெட் மேம்பாட்டுத் தலைவர்), சார்ல் லாங்கேவெல்ட் (வேகப் பந்துவீச்சு பயிற்சியாளர்) மற்றும் சுனில் ஜோஷி (சுழல் பந்துவீச்சு பயிற்சியாளர்) ஆகியோரின் எதிர்காலம் குறித்த முடிவுகள் நிலுவையில் உள்ள நிலையில் இந்த நியமனம் வந்துள்ளது.

பொண்டிங் பயிற்சியாளர்களின் மீது குறிப்பிடத்தக்க கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## சாதனை படைத்த இலங்கை வீரர் கமிந்து



இலங்கை - நியூசிலாந்து அணிகள் இடையிலான 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலா வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி காலே மைதானத்தில் நேற்று முன் தினம் தொடங்கியது. இதில் முதலில் பேட் செய்த இலங்கை அணி 106 ரன்னுக்குள் 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. அப்போது களம் புகுந்த கமிந்து மென்டிஸ் நிலைத்து நின்று ஆடி அணியை சிக்கலில் இருந்து மீட்டார். அவருக்கு குசல் மென்டிஸ் (50 ரன்) நன்கு ஒத்துழைப்பு கொடுத்தார்.

இதனால் தனது 4ஆவது சதத்தை நிறைவு செய்த கமிந்து மென்டிஸ் 114 ரன்களில் கேட்ச் ஆனார். ஆட்ட நேரம் முடிவில் இலங்கை அணி முதல் இன்னிங் சில் 88 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 302 ரன்கள் சேர்த்துள்ளது.

கமிந்து மெண்டிஸ் சதம் விளாசி யதன் 147 ஆண்டுகால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதல் 7 டெஸ்ட் போட்டிகளில் 50இற்கு அதிகமான ரன்களை குவித்த 2ஆவது வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். இதற்கு முன் கடந்த ஆண்டு, பாகிஸ்தானின் சவுத் ஷகீல் தனது முதல் ஏழு டெஸ்டிலும் 50இற்கும் அதிகமான ஸ்கோரை அடித்த முதல் டெஸ்ட் வீரர் ஆனார்.

இதற்கு முன், இந்தியாவின் சுனில் கவாஸ்கர் , பாகிஸ்தானின் சயீத் அகமது , மேற்கிந்தியத் தீவுகளின் பசில் புட்சர் மற்றும் நியூசிலாந்தின் பெர்ட் சட்க்ளிஃப் ஆகியோர் தங்களின் முதல் ஆறு டெஸ்டிலும் தலா அரை சதம் அடித்தனர் (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3225

### அபிநயா

போய் சேர்ந்ததும் லெட்டர் போடு என்று போய்



இன்று போட்டோ எடுத்து ஸ்டேட்டஸ் போடு என்றாகிவிட்டது

### மதுஷன்

வாழ்க்கையை திரும்பி பாக்கையில தான் புரிஞ்சுது...



வயிறு மட்டும் தான் முன்னுக்கு வந்து இருக்குன்னு..

### வினுஷா

ஒரே ஒரு நாள் நெட் ஆன் பண்ணபம இருந்து பாருங்க...



நீங்க எவ்வளவு வெட்டிய இருக்கீங்கன்னு உங்களுக்கே புரியும்

### தருண்

ஆண்கள் தவறாமல் மறந்து போகின்ற ரெண்டு நாட்கள்



ஒன்னு பொண்டாடியோட பிறந்த நாள்... இன்னொன்னு தன்னோட கல்யாண நாள்...

### சாருகா

ஹலோ, டாக்டரா... உடம்பை குறைக்க என்ன செய்யனும்...



புருஷனுக்கும் கொஞ்சம் மிச்சம் வச்சிட்டு சாப்பிடுங்கம்மா...

### நவீன்

ஆண்டவன் கொடுக்க நினைக்கும் போது யாரும் அதைத் தடுக்க முடியாது



அதே நேரம் ஆண்டவன் அதை பறிக்கும் போது யாராலும் அதை தடுக்கவும் முடியாது...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# ஊரடங்கு தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானிப்பார்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்த நேர்ந்தால், ஜனாதிபதியின் ஆலோசனைக்கமையவே அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்

ஊரடங்கு சட்டம் தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானிக்க முடியும் என்றும் பொலிஸாருக்கோ பாதுகாப்பு பிரிவினருக்கோ அது தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நாடு முழுவதிலும் 63,000 இற்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (நி)

# தேர்தல் பணிக்காக 1358 பேருந்துகள் சேவையில்

(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய தேர்தல் கடமைகளுக்காக 1,358 பேருந்துகள் வழங்கப்பட உள்ளதாக இலங்கை போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது.

மாவட்ட தேர்தல் அலுவலகங்களின் ஊடாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைய பேருந்துகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அதன் பிரதி பொதுமுகாமையாளர் பண்டுக ஸ்வர்ண ஹன்ச தெரிவித்தார்.

மேலும் தேர்தல் தொடர்பான பொலிஸ் பணிகளுக்காக 175 பேருந்துகள் வழங்கப்பட உள்ளன.

இதேவேளை, வாக்களிப்பதற்காக கிராமங்களுக்குச் செல்லும் மக்களின் வசதிக்காக இன்றும் நாளையும் விசேட தொலைதூர பேருந்து சேவையொன்றை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது. (நி)

# தேர்தல் முடிவுகளை பெரிய திரைகளில் ஒன்று கூடி பார்வையிட்டால் கைது

## தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)
அவசியமின்றி பெரிய திரைகளில் தேர்தல் முடிவுகளை அவதானிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு ஒன்று கூடி தேர்தல் முடிவுகளைப் பார்வையிட்டால் அவர்களைக் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும் அவசர நிலைமைகளில் முப்படையினர் அழைக்கப்படுவார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# பன்னாட்டு தூதுவர்களை சந்தித்த உறவுகள்



(ஜெனீவா)
ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினரின் சங்க பிரதிநிதிகள் கடந்தவாரம் ஜெனீவாவுக்கு சென்று அங்கு நடைபெறும் அமர்வுகளில் பங்கேற்று வருவதுடன் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடி வருகின்றனர்.

அந்தவகையில் கடந்த செவ்வாய்க்கிழமை பன்னாட்டு தூதுவர்களுடன் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (நி)

# வினாத்தாள் கசிவு விவகாரம் மூவர் பணி இடை நிறுத்தம்

(கொழும்பு)
தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைகள் தொடர்பான விசேட அறிக்கை ஒன்றை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிந்த விவகாரத்துடன் தொடர்புடைய மூவர் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அனுராதபுரம் இரத்மலை திஸ்ஸ கல்லூரியின் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை நிலையத்தில் பணிபுரிந்த மண்டபத் தலைவர் உட்பட மூவரின் சேவையை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். டபிள்யூ சமரக்கோன் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக மண்டபத் தலைவர் உள்ளிட்ட மூவரிடமும் மாகாணக் கல்வித் திணைக்களம் வாக்கு மூலம் பதிவுசெய்திருந்தது.

இதன்படி, அந்த பரீட்சை மண்டபத்தில் பணிபுரிந்த பரீட்சை நிலையத் தலைவர், உதவித் தலைவர் மற்றும் ஆசிரியர் ஒருவரின் சேவை இடைநிறுத்தப்பட்டு அவர்கள் மீது மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.(நி)

# இராசிபலன்

20.09.2024
புரட்டாதி, 04 வெள்ளிக்கிழமை
திருதியை பின்னிரவு 2.02 மணிவரை
ரேவதி முற்பகல் 9.44 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணி வரை
இராகுகாலம் 10.33-12.03மணிவரை
சந்திராஷ்டமம்-பூரம்

வளவன்

**மேஷம்:** வழிபாட்டில் ஆர்வம் கூடும், பணியில் சிறு மனஉளைச்சல் ஏற்படலாம், எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**கடகம்:** உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**துலாம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**மகரம்:** பெற்றோர் மீதான பாசம் கூடும், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பயணங்களால் பலனுண்டு.

**ரிஷபம்:** சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்:** குடும்பப் பொறுப்புக்கள் கூடும், நிறுத்தி வைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம்.

**மிதுனம்:** மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயலொன்றைச் செய்து காட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**கன்னி:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**தனுசு:** நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மீனம்:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.

கோபத்தால் போனது சிரித்தாலும் வராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக தீபம் திலீபனை அஞ்சலிக்க தடையில்லை!

## நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வை நடத்த அனுமதிக்க கூடாது என பொலிஸார் விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சட்டத்தரணி மணிவண்ணன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டோர் திலீபனின் நினைவிடத்திற்கு உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்த நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், இந்த நினைவேந்தல்களுக்கு தடை விதிக்கக்கோரி பொலிஸார் நீதி மன்றத்தை அணுகியிருந்தனர்.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

இதன் போது சட்டத்தரணி மணிவண்ணன் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார்.

எனினும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், கிளிநொச்சியில் உள்ள வழக்கொன்றுக்காகச் சென்றதால் இந்த வழக்கில் அவரால் கலந்து கொள்ள முடியவில்லை.

அத்துடன் எதிராளிகள் தரப்பில் மூத்த சட்டத்தரணி சிறீகாந்தா தலைமையில் சட்டத்தரணிகள் திருக்குமரன், மகிந்தன், றமணன், ரிசிகேசன், கௌதமன் உள்ளிட்டவர்கள் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இவ்வழக்கில் இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதவான் அ.ஆனந்தராஜா, 2011 ஆம் ஆண்டு புலிச்சின்னங்களைப் பயன்படுத்த தடை விதித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. எனினும் இறந்தவர்களின் நினைவேந்தலை நடத்த தடை இல்லை. இதன் பின்னர் 13 வருடங்களாக மக்கள் நினைவேந்தலை அனுஷ்டித்து வருகின்றனர்.

இதேவேளை தேர்தல் காலம் என்பதால், அதைக் கருத்திற்கொண்டு அஞ்சலிக்குத் தடை விதிக்கவேண்டும் என்றும் பொலிஸார் கோரினார்கள். இதற்கு, தேர்தல் காலத்தின் போது வாகனப் பேரணிகள் நடத்துவதற்கு மட்டுமே தடை விதிக்க முடியும் என்று தெரிவித்த நீதிவான் அவ்வாறு வாகனப் பேரணிகள் இடம் பெறாது என்பதற்கான உத்தர வாதங்களை எதிர்த்தரப்பினரிடம் இருந்து பெற்றுக் கொண்டதையடுத்து வழக்கை நீதிவான் முடிவுறுத்தினார்.

"மேலும், ஒலிபெருக்கிகளை பயன்படுத்த அனுமதி வழங்கும் அதிகாரம் பொலிஸாரிடம் இருப்பதால் இது தொடர்பில் பொலிஸாரே இறுதி முடிவை எடுக்கலாம் எனவும் நீதிபதி அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# நல்லூரில் திலீபனின் ஆவணக் காட்சியகம்

## இன்று அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

"பார்த்தீபன் திலீபனாக திலீபன் தியாகதீபமாக" என்ற தொனிப்பொருளிலான ஆவணக் காட்சியத்தினைக் கொண்ட தியாகதீபம் திலீபனின் நினைவுச் சதுக்க அங்குரார்ப்பணம் இன்று மாலை 6.30 மணிக்கு நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலய முன்றலில் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்படவுள்ளது. (6)

# நாகதம்பிரானின் கப்பல் திருவிழா



(யாழ்ப்பாணம்)

நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தில் நேற்று இரவு வியாழக்கிழமை கப்பல் திருவிழா பக்திபூர்வமாக நடைபெற்றது.

இதில் பெரும்திரளான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். (6-60)

# வாக்குரிமை மீறல் தொடர்பில் விசேட தொலைபேசி இலக்கம்

## யாழ்.பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேர்தல் தினத்தன்று வாக்காளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பதை கண்காணிக்கும் முகமாக கள பணிகளில் மனித வுரிமை ஆணைக்குழுவின் அலுவலகர்கள் ஈடுபடவுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, "ஜனாதிபதி தேர்தல் - 2024" கண்காணிப்பு நடவடிக்கையை நாளை மற்றும் நாளை மறுதினம் வரை மேற்கொள்ள ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

தேர்தல் தினத்தன்று வாக்காளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பதை கண்காணிப்பதற்கும் தேவை ஏற்படின் குறித்த இடத்திற்கு களவிஜயம் மேற்கொள்வதற்கும் ஆணைக்குழுவின் அலுவலர்கள் கடமையிலிருப்பார்கள்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகமும் நாளை தேர்தல் கண்காணிப்பு கடமைகளுக்காக திறந்திருக்கும் என்பதுடன் வாக்காளர்கள் தமது வாக்குரிமையினை பயன்படுத்துவதில் ஏதேனும் உரிமை மீறலை எதிர் கொண்டால் 021-222 2021 மற்றும் 070-365 4910 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (6-33)

# மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற தேர்தல் தொடர்பான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பெறுபேறுகளைத் தயாரித்து வெளியிடும் நிலையத்தில் கடமையாற்றவுள்ள அலுவலர்களுக்கான செயலமர்வானது யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான ம. பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள 511 வாக்களிப்பு நிலையங்களினதும் வாக்குகளை எண்ணுவதற்காக, 41 வாக்கெண்ணும் நிலையங்களும், அஞ்சல் வாக்குகளை எண்ணுவதற்காக 14 வாக்கெண்ணும் நிலையங்களுமாக மத்திய கல்லூரியில் 55 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையங்களின் பெறுபேறுகளையும் செவ்வை பார்ப்பதே பிரதான பணியாகும் என்பதால், நியமிக்கப்பட்ட அலுவலர்களின் பங்களிப்பானது காத்திரமானதுடன் மிகவும் வினைத்திறனாகவும் இருத்தல் வேண்டும் எனத் தெரிவித்தார்.

இச் செயலமர்வில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் இக்கடமையில் ஈடுபடவுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் அலுவலர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. (6-33)

# தேரடிச் சித்தர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் இடம்பெறும்.

இதன்போது திருமுறை மற்றும் நற்சிந்தனை பாடல்களைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு கந்தபுராணம் பற்றி சொல்வேந்தன் செ.சிறி ஆதவன் சொற்பொழிவாற்றவுள்ளார். (6)

# கிருமித் தொற்றால் ஆண் சிசுவொன்று உயிரிழப்பு

(கரணவாய்)

பிறந்து 16 நாட்கள் நிரம்பிய ஆண்சிசு ஒன்று கிருமித் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளது.

இச் சம்பவத்தில் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த சிசு ஒன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

தெல்லிப்பழை வைத்திய சாலையில் கடந்த முதலாம் திகதி குழந்தை பிறந்த நிலையில் குழந்தைக்கு பாலூட்டிய போது தாய்ப் பால் புரைக்கேறிய நிலையில் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு கடந்த திங்கட்கிழமை சிசு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். பிரேத பரிசோதனை அறிக்கையில் கிருமித்தொற்று ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (6-60)

## திருத்தப்பட்ட நெடுந்தாரகை

# வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிப்பு




(யாழ்ப்பாணம்)

நெடுந்தாரகை பயணிகள் படகை வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் வடக்கு மாகாண ஆளுநர் உத்தியோகபூர்வமாக நேற்று கையளித்தார்.

சுமார் ஒரு வருடத்தின் பின்னர் நெடுந்தாரகை பயணிகள் படகு தனது சேவையை ஆரம்பித்துள்ளது. படகில் மேற்கொள்ளப்பட்ட திருத்தப்பணிகளை தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம். சார்ள்ஸினால், வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் நெடுந்தாரகை பயணிகள் படகு நேற்று முற்பகல் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

நெடுந்தீவு இறங்கு துறைக்கு சென்ற ஆளுநர், படகை பார்வையிட்டார். இதுவரை காலம் மாகாண சபையின் பொறுப்பில் காணப்பட்ட இந்த படகானது 52 மில்லியன் ரூபாய் செலவில் திருத்தப்பட்டு, வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறல்களை கண்காணிக்க விசேட நடமாடும் சேவை



(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கு எண்ணும் நடவடிக்கை முடியும் வரை மனித உரிமை மீறல்களை கண்காணிப்பதற்காக விசேட நடமாடும் சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

தேர்தல் நடவடிக்கைகள் முழுவதிலும் விரிவான மேற்பார்வையை உறுதி செய்யும் வகையில், பிராந்திய மனித உரிமை அலுவலகங்களால் இந்த முயற்சி ஒழுங்குபடுத்தப்படும் என மனித உரிமை ஆணையாளர் நாயகம் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார். (நி)

# சுவிஸில் சடலமாக மீட்கப்பட்ட இலங்கையர்

(ஜெனீவா)

சுவிஸ் நாட்டில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் இலங்கையர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த சடலமானது நேற்றுக் காலை சுவிஸ் - கிளாட் ப்ரூக்கில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் மீட்கப்பட்டுள்ளது. கோபிநாத் என்ற 34 வயதுடைய இலங்கையர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த குடியிருப்பு Airbnb நிறுவனத்தால் வாடகைக்கு விடப்பட்டது என தெரியவந்துள்ளது. அவசர சேவை மையத்திற்கு கிடைத்த அழைப்பின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் சம்பவ இடத்தில் இருந்த இருவரையும் கைது செய்துள்ளனர். சுவிஸ் நாட்டைச் சேர்ந்த 40 மற்றும் 54 வயதான சந்தேகநபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் மூவருக்கு இடையிலான உறவு மற்றும் எதனால் கொல்லப்பட்டார் என்பது தொடர்பில் இன்னும் தெரியவராத நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி)


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, வட்டுக்கோட்டை
## ஆதனப்பெயர் மாற்றம்
### 69/12, இத்தியடி முதலிகோவில் வீதி வட்டாரம்-09

வலிகாமம் மேற்கு பிரதேசசபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் -09 இத்தியடி முதலிகோவில் வீதியிலுள்ள இல: 69/12 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **குமாரசாமி பாலசுப்பிரமணியம்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **கணபதிப்பிள்ளை சண்முகம் பெண் பரமேஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு க.கணேசானந்தன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 387/18.04.1982ஆம் இலக்க உறுதியால் **தாமோதரம்பிள்ளை பத்மநாதனும் பெண் காமாட்சி அம்மையும், குமாரசுவாமி பாலசுப்ரமணியமும், வரதராஜா சிறிரங்கனும், சோமசுந்தரம் சிவபாதமும் பெண் சிவகாமசுந்தரியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**வயிரவன் சிவசுப்பிரமணியம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.சபாநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3493/29.07.1989 ஆம் இலக்க உறுதியால் குறித்த கணபதிப்பிள்ளை சண்முகமும் பெண் பரமேஸ்வரியும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**கருணாநிதி ஜெயகாந்தரூபன் பெண் தர்ஷினி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1184/08.01.2017 ஆம் இலக்க உறுதியால் குறித்த **வயிரவன் சிவசுப்பிரமணியமும் பெண் நாகேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **கருணாநிதி ஜெயகாந்தரூபன் பெண் தர்ஷினி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **கருணாநிதி ஜெயகாந்தரூபன் பெண் தர்ஷினி** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை**

(1984)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலைப்பீடம்
### பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் (டிப்ளோமா)
### பகுதிநேர ஈராண்டுக் கற்கைநெறி- (2024-2026)
### புதிய அனுமதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்தும் கல்வி நிர்வாகிகளிடமிருந்தும் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 18.10.2024 அன்று 50 வயதுக்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்தோ (www.jfn.ac.lk) அல்லது கலைப்பீட இணையத்தளத்திலிருந்தோ (www.arts.jfn.ac.lk) தரவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள் யாவும் தத்தம் திணைக்கள தலைவர் ஊடாகவோ அல்லது பாடசாலை அதிபர் ஊடாகவோ அனுப்பப்பட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் மக்கள் வங்கிக்கிளையில் கணக்கிலக்கம் 040022240000980 இற்கு ரூ.1,500/- செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்து பிரதிப்பதிவாளர், கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில்18.10.2024 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

இக்கற்கைநெறிக்கான கட்டணம் ரூ. 85,000/-.

எழுத்துத் தேர்வு (பொதுவிவேகம் மற்றும் கல்வியியல் பொதுத்தகைமை ஆகிய பாடங்கள்) மற்றும் நேர்முகத் தேர்வு இரண்டினதும் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

கற்கைநெறிக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்திலிருந்து 25 மைல் சுற்றாடலுக்குள் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கைநெறிக்குப் பதிவுசெய்யும்போது மேற்குறிப்பிட்ட இடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் பல்கலைக்கழகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்து அனுப்பப்பெறாத விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**பதிவாளர்**

(சி-1217)



## தேங்காய் எண்ணெய் ஆலை வாடகைக்கு வழங்குதல்

கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் முள்ளியவளை மத்தி காட்டு விநாயகர் கோயில் சந்தியிலுள்ள கட்டடத்துடன் கூடிய இயங்கும் நிலையிலுள்ள தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய இயந்திர வசதிகளைக் கொண்ட பகுதி கூறுவிலை மூலம் வாடகைக்கு விடுவதற்கு தீர்மானித்துள்ளனர். எனவே தேங்காய் எண்ணெய் ஆலை பார்வையிட விரும்புபவர்கள் சங்கத்தின் பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு (மு.ப.9.00 - பி.ப.4.00) மணிவரை பார்வையிட்டு கூறுவிலைகளை தலைவர் கரைதுறைப்பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு பதிவு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 14.10.2024 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். கூறுவிலைக்கான கடிதத்தை உறையின் பின் இடது பக்க மேல் மூலையில் தேங்காய் எண்ணெய் ஆலை வாடகைக்கான கூறுவிலை என குறிப்பிடல் வேண்டும்.

**தலைவர்,**
**கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம்,**
**முல்லைத்தீவு.**

**தொடர்பு:**
**பொது முகாமையாளர்**

(சி-1213)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அமெரிக்கா வரும் மோடியை சந்திக்கவுள்ளேன்-ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரம் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. தேர்தலில் போட்டியிடும் கமலா ஹாரிசும் ட்ரம்பும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே மெக்சிகோவில் பிரசாரத்தில் ஈடுபட்ட குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ட்ரம்ப் பேசுகையில் அடுத்த வாரம் அமெரிக்காவில் பயணம் மேற்கொள்ளும் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க உள்ளதாக தெரிவித்தார்.

மேலும், பிரதமர் மோடி "அற்புதமானவர்" என்றும் அவரை அடுத்த வாரம் சந்திப்பேன் என்று கூறினார். ஆனால் அவர்களின் சந்திப்பு பற்றிய கூடுதல் விவரங்களை கூற வில்லை.

பிரதமர் மோடியும் டொனால்ட் ட்ரம்பும் கடைசியாக 2020 ஆம் ஆண்டு பெப்ரவரியில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இந்தியா வந்தபோது சந்தித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா நாடுகள் அங்கம் வகிக்கும் குவாட் அமைப்பின் மாநாடு அமெரிக்காவின் வில்மிங்டனில் 21 ஆம் திகதி நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் பிரதமர் மோடி கலந்து கொள்கிறார்.

இதற்காக பிரதமர் நரேந்திர மோடி நாளைய தினம் அமெரிக்காவுக்குச் செல்கிறார். வரும் 21, 22, 23 ஆகிய 3 நாட்கள் அவர் அமெரிக்காவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளார் என்று இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிக்கை வெளியிட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது. (நி)

## ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த சிறுமி உயிருடன் மீட்பு-ராஜஸ்தானில் சம்பவம்

(டில்லி)

ராஜஸ்தான் மாநிலத்தில் ஆழ்துளை கிணற்றில் விழுந்த 2 வயது சிறுமி 20 மணி நேரப் போராட்டத்துக்குப் பின் உயிருடன் மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை ஆழ்துளைக் கிணறு அமைந்திருக்கும் பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த 2 வயது சிறுமி நீரு குர்ஜார், எதிர்பாராத வகையில் 35 அடி ஆழமுள்ள ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்தார்.

பந்திகுய் என்ற கிராமத்தில், புதன்கிழமை மாலை 5 மணிக்கு சிறுமி ஆழ்துளை கிணற்றுக்குள் விழுந்தது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. நேற்று அதிகாலை 2 மணி வரை தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் என பல துறை வீரர்கள் பல முயற்சிகளை மேற்கொண்டனர்.

இரவு முழுவதும் அவரை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வந்தது. மீட்புக் குழுவினர் பல்வேறு முறைகளில் சிறுமியை மீட்கும் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இறுதியாக 20 மணி நேரப் போராட்டத்துக்குப் பிறகு சிறுமி உயிருடன் மீட்கப்பட்டார். சிறுமி விழுந்த ஆழ்துளைக் கிணற்றுக்கு அருகே 31 அடிக்கு மீட்புக் குழுவினர் பள்ளம் தோண்டி, அங்கிருந்த, ஆழ்துளைக் கிணற்றுக்கு ஒரு குழாயை செலுத்தினர்.

இதற்கிடையே, குழந்தை பயப்படக் கூடாது என் பதற்காக, மைக் மூலம், குழந்தையின் தாய், ஆறுதலாகப் பேசிகொண்டேயிருந்தார். பிறகு, சிறுமி பத்திரமாக மீட்கப்பட்டார்.

ஒரு இரும்புக் கம்பியை உள்ளே செலுத்தி குழந்தையைப் பிடிக்கச் செய்து, கம்பியை மேலே இழுக்க முயன்றதும் பலனளிக்கவில்லை. பிறகு அருகில் பள்ளம் தோண்டி தான் சிறுமி மீட்கப்பட்டுள்ளார். பள்ளம் தோண்ட 12 மணி நேரம் ஆனதாகக் கூறப்படுகிறது. (நி)

## மியான்மரில் உள்நாட்டு போர் தீவிரம் 3 கோடி மக்கள் இடப்பெயர்வு



(நைரோபி)

மியான்மரில் நீடிக்கும் உள்நாட்டு போரால் மூன்று கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் நாட்டை விட்டு இடம் பெயர்ந்து உள்ளதாக ஐ.நா சபை தெரிவித்துள்ளது.

நம் அண்டை நாடான மியன்மாரில் அந்நாட்டு இராணுவத்திற்கும், பூர்வ குடிகளான காரேன் பிரிவைச் சேர்ந்த கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மோதல் நிலவி வருகிறது.

அதன்படி கடந்த 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் இதுவரை 5,350 பேர் உயிரிழந்துள்ளனர் இதன் காரணமாக, மூன்று கோடிக்கும் மேற்பட்ட மக்கள், தங்கள் நாட்டை விட்டு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

மேலும் இவ்வாறு, அகதிகளாக சென்ற மக்களின் நிலை பற்றி விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றதுடன் அவர்களின் வாழ்வை மேம்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் ஐ.நா சபை தெரிவித்துள்ளது. (நி)

## இஸ்ரே... தீர்மா...

(ஜெனீவா)

### ஆக்கிரமிக்கப்... இருந்து இஸ்ரே... கோரும் தீர்ம... பொதுச்சபை நி...

ஒருவருடத்திற்குள் இஸ்ரேல் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வெளியேறவேண்டும் என கோரும் தீர்மானத்திற்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் உறுப்பு நாடுகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

124 நாடுகள் இந்த தீர்மானத்

## தொடரும் வெ... 20 பேர் உ...



(பெய்ரூட்)

லெபனானில் வயர்லெஸ் தகவல் தொடர்பு சாதனங்களில் இரண்டாவது நாளாக பதிவான வெடிப்பு சம்பவங்களில் குறைந்தது 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 450 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை லெபனானில் கடந்த செவ்வாய்க்கிழமை ஒரே நேரத்தில் பேஜர் கருவிகள் வெடித்து உலக நாடுகளை அதிர்ச்சி அடையச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரேல் வெளியேற வேண்டும் ...னம் நிறைவேற்றியது ஐ.நா !

**...கப்பட்ட பாலஸ்தீன பகுதிகளில் ...ஸ்ரேல் வெளியேறவேண்டும் என ...மானத்தை ஐக்கிய நாடுகள் ...நிறைவேற்றியுள்ளது.**

திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளன, 14 நாடுகள் எதிராக வாக்களித்துள்ளன,43 நாடுகள் வாக்களிப்பை புறக்கணித்துள்ளன.

பிரிட்டனும் அவுஸ்திரேலியாவும் வாக்கெடுப்பைத் தவிர்த்துள்ள அதே வேளை அமெரிக்கா எதிர்த்து வாக்களித்துள்ளது.

இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் தனது சட்ட விரோத பிரசன்னத்தை விரைவில் முடிவிற்கு கொண்டுவரவேண்டும், குடியேற்றங்களை நிறுத்த



வேண்டும் என சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள சில மாதங்களின் பின்னர் ஐநா இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. (நி)

## ...வடிப்பு சம்பவம் ...உயிரிழப்பு



செய்த நிலையில் அடுத்த நாளில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

மேலும் லெபனான் நாட்டின் பிரதான அரசியல் கட்சியாகவும் துணைராணுவப் படையாகவும் ஹிஸ்புல்லா செயற்படுகிறது. அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஹிஸ்புல்லாவை தீவிரவாத அமைப்பாக அறிவித்துள்ளன. அத்துடன் ஈரானின் கைப்பாவையாக செயற்படும் இந்த அமைப்புக்கும் இஸ்ரேல் இராணுவத்திற்கும் இடையே நீண்ட காலமாக மோதல் நீடித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அணு ஆயுத வீச்சுக்கு இடத்தை தேர்ந்தெடுத்த ரஷ்யா !

## சர்வதேச ஊடகங்கள் அதிர்ச்சித் தகவல்

(மொஸ்கோ)

அணுகுண்டு வீசுவதற்கு ரஷ்யா முழுவீச்சில் தயாராகிக் கொண்டிருப்பதாகவும் அதனை வீசுவதற்கான இடத்தையும் தெரிவு செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டுள்ளன.

உக்ரைன் போரை தொடர்ந்து, ரஷ்யா மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டு, அந்நாட்டுக்கு அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகள் பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

மேலும், ரஷ்யாவை சமாளிப்பதற்கு தேவையான அனைத்து விதமான ஆதரவுகளையும் அமெரிக்கா வழங்கி வருகிறது.



இந்த விடயங்களை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை இன்னும் ஆத்திரமடைய செய்துள்ளதுடன் இந்த விவகாரத்தில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் தலையிடக் கூடாது எனவும் எச்சரித்துள்ளார்.

அதாவது உக்ரைனுக்கு அமெரிக்கா உதவி செய்தால் அணுகுண்டு வீசுவோம் என்பதை வெளிப்படையாக கூறாமல் மறைமுகமாக ரஷ்யா தெரிவித்து வருகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் திடீரென ரஷ்யா அணுகுண்டை வீசுவதற்கு முழுவீச்சில் தயாராகி வருவதாக திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கிடைக்கப்பெற்ற தகவல்கள் படி, குறித்த அணுகுண்டை ஆர்க்டிக் பகுதியில் வீசுவதற்கு ரஷ்யா திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், ஆர்டிக் பகுதியானது ரஷ்யா சார்பில் 1990 இற்கு முன்பு அணுஆயுத சோதனை நடத்த பயன்படுத்தப்பட்டதாகவும் அதன் பின்னர் இந்த இடம் பயன்படுத்தப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

அதன் படி குறித்த இடத்தை ரஷ்யா தேர்வு செய்து சோதனை நடத்த முடிவு செய்துள்ளதையடுத்து நிச்சயம் ரஷ்யா அணுஆயுத சோதனையை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை விட்டு வெளியேறுவோரால் பொருளாதாரத்திற்கு பாதிப்பு

## பேராசிரியர் வசந்த அத்துக்கோரள

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் வெளிநாட்டில் நல்ல வாய்ப்புகளை தேடி இலங்கையை விட்டு வெளியேறுகின்றமை பொருளாதாரத்திற்கு பாரிய பிரச்சினையாக மாறியுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறையின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

வரி செலுத்துவோர் அவர்களுக்கு கல்வி கற்க பணம் செலுத்துவதனால் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருவதுடன், இறுதியில் இது நாட்டிற்கு பெரும் பின்னடைவாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பெரும்பாலான தொழில்நுட்பம் மற்றும் விவசாய பட்டதாரிகள் உயர் கல்விக்காக வெளியேறி, வெளிநாட்டில் தங்குவதால் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கும் செயற்பாடாக அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உயர்தரப் பரீட்சையில் 3 ஏ சித்தி பெற்ற பிள்ளைகள் கூட சில சமயங்களில் போட்டித்திறன் காரணமாக அங்கீகாரம் பெறுவதில்லை என பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

மேலும், பணக்கார குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளை இலங்கையில் உள்ள தனியார் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புவதனால் தனியார் மற்றும் அரச பல்கலைக் கழகங்களுக்கு இடையே பெரும் போட்டி நிலவுகிறது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை ஆண்டுதோறும் நடத்தும் பாடசாலை ஆய்வின்படி, அரச பாடசாலைகளில் சேரும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# ஜனாதிபதித் தேர்தலுக்காக விசேட தொடருந்து சேவை



(கொழும்பு)

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக விசேட தொடருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி கொழும்பு கோட்டைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் விசேட தொடருந்துகளை இயக்குவதற்கு தொடருந்து திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலன்று தொடருந்து நேர அட்டவணை வழமை போன்று நாளையும் நடைமுறைப் படுத்தப்படும் எனத் தொடருந்து பிரதி பொது முகாமையாளர் நந்தன இண்டி போலகே தெரிவித்துள்ளார்.

மேலும் நாளையும் நாளை மறுதினமும் நீண்ட தூர தொடருந்துகள் சேவையில் ஈடுபடும் எனவும், குறுகிய தூர தொடருந் துகளில் சில குறைப்புக்கள் ஏற்படக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# சிறுபோக நெல் அறுவடை இந்த ஆண்டு அதிகரிப்பு

## விவசாயத் திணைக்களம்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெல் அறுவடையில் எதிர்பார்த்த இலக்கை எட்டியுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த ஆண்டு சிறுபோக நெல் அறுவடை 2.6 மில்லியன் மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது.

கடந்த சிறுபோகத்தின் போது 2 மில்லியன் மெற்றிக்தொன் நெல் அறுவடை பதிவு செய்யப்பட்டிருந்ததாக விவ சாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

## இன்று ஒரு தகவல் 227



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# கடிதம்

ஒரு ஆன்மிகப் பெரியவர். அவரிடம் எத்தனையோ நல்ல பழக்கங்கள். அவரிடம் நான் பார்த்து ஆச்சரியப்பட்ட விடயம் என்ன தெரியுமா? வருகின்ற கடிதத்திற்கு உடனே பதில் போடுவது தான்.

இவ்வளவுக்கும் அவர் தினம் ஒரு ஊரிலே இருப்பார். பக்தி பிரசங்கம் செய்து கொண்டிருப்பார்.

கடிதம் போடுபவர்கள் அவருக்கு தெரிஞ்சவர்களா இருந்தாலும் சரி தெரியதாவர்களாக இருந்தாலும் சரி உடனே ஒரு கார்ட்டிலே இரண்டு வரி எழுதிப் போட்டு விடுவார். போட்டவர்கள் மனதிலே நிறைந்து விடுவார்.

எங்களிலே பல பேருக்கு அந்தப் பழக்கம் இல்லை. பதில் போட வேண்டும் என்று நினைத்தே காலத்தை கடத்திவிடுவோம். நாம் போடுவதற்குள்ளே அவர் புறப்பட்டு நேரே வந்து விடுவார்.

மனித நேயத்தை காட்டுவதற்கு கடிதம் ஒரு முக்கியமான சாதனம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. கொஞ்சம் அக்கறை வேண்டும். அவ்வளவு தான்.

இன்று நமக்கு கடிதம் வருகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். இன்றைக்கு அதற்கு ஒரு பதிலை எழுதிப் போட்டுவிட்டால் அவர் மனதினிலே நாம் ஒரு தனி இடத்தைப் பிடித்து விடுவோம்.

இன்னொரு விடயம் கடிதத்திலே தான் இடம் தாராளமாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு அதிலே போய் புராணம் எல்லாம் எழுதிக்கொண்டிருக்க வேண்டியது இல்லை.

அதே நேரத்தில் நலம் நலம் அறிய அவா என்று இரண்டு வார்த்தையில் முடித்து விட்டு இப்படிக்கு என்றும் எழுதி கையெழுத்து போட்டுவிட்டாலும் அது நன்றாக இருக்காது.

ஒரு கடிதம் வள வள என்ற நீளமாகவும் இருக்கக்கூடாது. திடீர் என்று இரண்டு வரியிலேயும் முடிந்து விடக்கூடாது. அளவாக இருக்க வேண்டும். கருத்துடனும் இருக்க வேண்டும்.

நீங்கள் ஒரு அலுவலகத்தில் வேலை பார்க்கின்றீர்கள். உங்கள் வீட்டுக்கார அம்மா அவர் பிறந்த வீட்டுக்கு போய் விட்டார். அவருக்கு கடிதம் எழுத வேண்டும். அந்தச் சமயத்தில் உங்கள் ஸ்ரேனோவைக் கூப்பிட்டு கடித்தை டிக்கெட் செய்து ரைப் பண்ண சொல்லி for என்று போட்டு உங்களுக்காக யாரையாவது கையெழுத்துப் போட்டு Despatch பிரிவுக்கு அனுப்பினால் அது நன்றாக இருக்குமா? யோசித்துப் பாருங்கள்.

அலுவலக கடிதங்கள் என்றால் ரைப் செய்யலாம். வேறு ஒருவர் உங்களுக்காக கையெழுத்திடலாம். மனைவிக்கோ நண்பர்களுக்கோ எழுதுகின்ற கடிதங்களை நீங்கள் உங்கள் கைப்படவே எழுத வேண்டும். அது தான் மரியாதை.

ரைப் ரைட்டர் கடிதங்களிலே இதயம் தெரியாது இயந்திரம் தான் தெரியும். கடிதத்திலே எந்த விடயத்தையும் மிகைப்படுத்தக் கூடாது.

படிக்கின்றவர்கள் மனம் புண்படக்கூடாது. கண்டபடி திட்டி எழுதவும் கூடாது. பின்னாலே அது இடஞ்சலாகக் கூட முடியலாம். எதிரான சாட்சிகளும் அமையலாம்.

நீங்கள் ஒருவரை கொன்று விடுவேன் என்று நகைச்சுவையாக கடிதம் எழுதுவீர்கள். அந்த ஆசாமியை உண்மையாகவே ஒருவர் கொன்று விட்டார். அதன்பின்னர் நீங்கள் அவருக்கு எழுதிய கடிதம் பொலிஸிற்கு கிடைக்கின்றது. என்ன ஆகும் என்று யோசித்துப் பாருங்கள்.

நீங்கள் நிரபராதி என்று நிரூபித்து விடலாம். இருந்தாலும் அவஸ்தை தானே. வருகின்ற கடிதங்களை ஒரு இடத்திலே ஒழுங்காக அடுக்கி வைக்க வேண்டும். பத்திரப்படுத்த வேண்டியதை பத்திரமான இடத்திலே வைக்க வேண்டும்.

இது யார் கண்ணிலே படப்போகின்றது என்று நீங்கள் அலட்சியமாக இருகலாம். ஆனால் பட்டுவிடும். இதன்பின் உங்களுக்குத் தான் கஷ்டம்.

இன்னுமொரு முக்கியமான விடயம். ஆண்கள் பெண்களுக்கு எழுதும் சமயத்திலும் பெண்கள் ஆண்களுக்கு எழுதும் சமயத்திலேயும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். கவனமாக எழுத வேண்டும்.

வார்த்தைகளின் அர்த்தம் மாறக்கூடாது. யாதர்த்தமாக நீங்கள் எழுதியிருப்பீர்கள். படிக்கும் போது அதிலே புதிதாக ஒரு அர்த்தம் இருப்பது போல் தெரியும். நாம் அந்த அர்த்தத்திலே எழுதவில்லை அதற்குப்பின் அல்லாட வேண்டியிருக்கும்.

யாருக்கு எழுதும் கடிதமாக இருந்தாலும் சரி எழுதி முடிந்ததும் ஒருதரம் படித்துப் பார்ப்பது நல்லது. சின்ன எழுத்துப் பிழை கூட விபரீதமான அர்த்தத்தை உருவாக்கலாம்.

ஒரு சமயத்திலே பல கடிதங்கள் எழுதும் போது கடிதமும் கடித உறையும் மாறி போய்விடாது. பார்த்துக் கொள்ள வேண்டும். முகவரி எழுதும் போது அவசரமில்லாமல் தெளிவாக எழுத வேண்டும். பின் கோடு தெரிந்தால் அவசியம் குறிப்பிட வேண்டும்.

சரியான அளவிற்கும் தபால் தலை ஒட்டவேண்டும். வாங்குபவர் பணம் செலுத்த வேண்டும் என்று விட்டுவிடக் கூடாது. இப்போது சொன்னவையெல்லாம் சாதாரண விடயம் தான். இருந்தாலும் சமயோசிதமாக நடந்து கொள்ள வேண்டிய விடயம்.

ஒரு தபால் பெட்டியில் முன் ஒருவர் பரிதாபமாக நின்று கொண்டிருந்தார். என்ன சார் நடந்தது என்று கேட்டார். ஒரு தவறு நடந்து விட்டது சார். ஒரு கவரை இந்தப் பெட்டிக்குள்ளே போட்டுவிட்டேன். ஆனால் அந்தக் கவருக்குள்ளே நான் எழுதிய கடிதத்தை வைக்க மறந்து விட்டேன் என்றார். இதைக் கேட்டதும் அவர் நான் கவருக்குள்ளே கடிதத்தை வைத்து மூடி ஒட்டி சரியாகத் தான் போட்டேன். இருந்தாலும் ஒரு தவறு நடந்து விட்டது என்றார். அது எப்படி என்றேன். முகவரி எழுத மறந்து விட்டேன் என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீண்பதற்றங்கள் வேண்டாம்

## சர்வதேச கண்காணிப்பாளர்கள் வலியுறுத்து

**(கொழும்பு)**

**தேர்தல் நாளிலும் அதற்குப் பிறகும் பீதியடைய வேண்டாம் என ரஷ்ய கூட்டமைப்பின் சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர் எவ்ஜெனி ஷெவ்சென்கோவ் இலங்கை வாக்காள பெருமக்களுக்கு தெரிவித்தார்.**

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

செப்ரெம்பர் 21 ஆம் திகதி எந்தக் கட்சிக்கும் செல்வாக்கு இல்லாமல் அமைதியான முறையில் தேர்தலை அவதானிக்க தயாராக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை அவதானிப்பதற்காக இந்த செய்தியாளர் சந்திப்பில் பங்களாதேஷ், நேபாளம், ரஷ்யா, பிலிப்பைன்ஸ், பூட்டான், மாலைதீவு உள்ளிட்ட 7 நாடுகளைச் சேர்ந்த சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கும் நோக்கில் இந்த சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழு நேற்று முன்தினம் இலங்கை வந்தடைந்தது.

இதேவேளை கொழும்பு, யாழ்ப்பாணம், காலி உள்ளிட்ட இலங்கையின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கிய வகையில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக மாலைதீவு பிரதிநிதியாக வருகை தந்த கண்காணிப்பாளர் ஃபுவாட் தௌபிக் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கச் செல்லும் போது, வாக்காளர் நன்கு தயாராக இருக்க வேண்டும் என்றும், 38 வேட்பாளர்கள் போட்டியிடுவதால், அவர்கள் வாக்களிக்கும் வேட்பாளரின் அடையாளம் எந்த இடத்தில் உள்ளது என்பது குறித்து தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். வாக்குச் சாவடிக்குச் செல்லும் முன் வாக்குச் சீட்டில் பார்வையிடுவது நேரத்தை மிச்சப்படுத்தும்.

ஒவ்வொரு அதிகாரியும் சட்டத்தின்படி பணிபுரிந்தால், வாக்காளர்கள் அமைதியாகச் செயற்பட்டால் வெற்றிகரமான தேர்தலை நடத்த முடியும் என்று மாலைதீவை பிரதிநிதித்துவப்படுத்தும் தேர்தல் பார்வையாளர் தெரிவித்தார்.

இந்த சர்வதேச பிரதிநிதிகளுக்கு மேலதிகமாக, ஐரோப்பிய ஒன்றியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 80 பார்வையாளர்களும், பொதுநலவாய நாடுகள் மற்றும் உள்ளூராட்சி தேர்தல் கண்காணிப்பாளர்கள் உட்பட சிவில் அமைப்புகளை சேர்ந்த இருவர் இந்த ஆண்டு தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் பங்கேற்க உள்ளனர். (நி)



மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட மணி மாஸ்டர் விருதுக்கான திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்: ஜோசப் நயன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 200 | 200 | 150-250 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 200 | 200-220 | 300 |
| தக்காளி | 150 | 200 | 200 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 300 | 200 | 150-200 | 200 |
| கோவா | 200 | 250 | 300 | 250 | 300 |
| கரட் | 250 | 260 | 300 | 280 | 300 |
| பூசணி | 60 | 50 | 80 | 50 | 80 |
| புடோல் | 50 | 130 | 100 | 100 | 240 |
| வாழைக்காய் | 150 | 200 | 200 | 150-200 | 250 |
| சின்ன வெங்காயம் | 320 | 300 | 250 | 150 | 350 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 250 | 250 | 250 |
| பாகற்காய் | 300 | 350 | 400 | 300-350 | 400 |
| வெண்டக்காய் | 60 | 80 | 100 | 80-100 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 180 | 200 | 140 | 240 |
| பயற்றங்காய் | 250 | 250 | 150 | 150-200 | 300 |
| லீக்ஸ் | 320 | 300 | 350 | 250 | 350 |
| பீற்றூட் | 100 | 100 | 150 | 70-90 | 160 |
| கறிமிளகாய் | 400 | 500 | 500 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 300 | 250-350 | 400 |
| போஞ்சி | 350 | 380 | 300 | 220 | 400 |
| கத்தரிதம்புள்ள | 130 | 150 | 250 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 120 | 60 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 500 | 300 | 400 | 300-350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 140 | 120 | 80-110 | 100-140 |
| இராசவள்ளி | -- | 850 | 650 | 600 | 700 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 220 | 120 | 120 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 100 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 100 | 140 |

# பிரசார முடிவின் பின்னரான தேர்தல் முறைப்பாடுகள் அதிகரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஒரு நாளில் மட்டும் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 208 முறைப்பாடுகள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், ஜூலை 31ஆம் திகதியில் இருந்து செப்டெம்பர் 18 ஆம் திகதி வரை 4, 945 ஆக அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதில் 1,515 முறைப்பாடுகள் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 3,429 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்தக் காலப்பகுதியில் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 34 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இதுவரையில் தங்களுக்கு கிடைக்கப்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 4,304 முறைப்பாடுகள் தொடர்பில் தீர்வு கண்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எஞ்சிய 641 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (நி)


## கண்ணீர் அஞ்சலி

பதிவாளர் நாயகம் திணைக்கள வடக்கு வலய அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி.ஜீவிதா நிசாந்தன் அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர்.**

**தம்பிஜயா கிருஷ்ணமூர்த்தி**

அவர்கள் 19.09.2024 வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**பதிவாளர் நாயகம் திணைக்களம், யாழ்ப்பாணம்.**

(C-116)


# யானையின் தாக்குதலிற்குள்ளான ஆசிரியர் வைத்தியசாலையில் அனுமதி

(நெளுக்குளம்)

காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகிய ஆசிரியர் ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியில் இருந்து கேப்பாபிலவு வீதியால் பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த போது புதுக்குடியிருப்பு கள்ளியடி பகுதியில் யானை வீதியை வழிமறித்து ஆசிரியரின் மோட்டார் சைக்கிளை தூக்கி எறிந்ததோடு குறித்த ஆசிரியரினை தாக்கிவிட்டு சென்றுள்ளது.

அதனையடுத்து தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியர் காயங்களோடு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த தாக்குதலுக்கு இலக்கான நபர் கணுக்கேணி முள்ளியவளையைச் சேர்ந்த நடனசபாபதி சிவசோதி 28 வயதுடைய உடையார்கட்டு குரவில் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மதுராந்தகர் ஒரு மணையில் உட்கார்ந்த பின்னர் அவருக்கெதிரே வந்தியத் தேவனும் உட்கார்ந்தான்.

கண்ணை மூடிக்கொண்டு சிறிது நேரம் தியானத்தில் ஆழ்ந்திருந்தான். அவனுடைய வாய் ஏதோ மந்திரங்களை முணுமுணுத்துக் கொண்டிருந்தது. பிறகு அவன் உடம்பை ஒரு குலுக்கு குலுக்கிக் கொண்டு ஆவேசம் வந்தவனைப் போல் நடித்தான். வெறியாட்டக் காரனைப் போல் அவன் உடல் நடுங்கிற்று.

பின்னர் கண்களை அகலத் திறந்தான். எதிரில் இருந்த தீபத்தின் பிழம்பை உற்றுப் பார்க்கலானான். சற்று நேரம் பார்த்துவிட்டு மதுராந்தகத் தேவரை நோக்கி, "ஐயா! தங்களைப்பற்றி அலட்சியமாக நான் ஏதாவது சொல்லியிருந்தால் மன்னிக்க வேண்டும். தங்களுடைய யோகம் சாதாரண யோகம் அல்ல. அங்கே சபையில் உட்கார்ந்து பாட்டுப் படித்த பிள்ளையின் யோகத்துக்கும் தங்கள் யோகத்துக்கும் யாதொரு சம்பந்தம் இல்லை. அந்தப் பிள்ளையின் யோகம் அரசர்களின் ஆதரவினால் ஏற்படும் ராஜயோகம். தங்களுடைய யோகத்தைப் பற்றி இந்தத் தீபத்திலே நான் காண்பது ஆகா என்னையே பிரமிக்கச் செய்கிறது!" என்றான்.

"அப்படி என்ன காண்கிறாய்? சொல்! சொல்!" என்றார் மதுராந்தகர். "ஆகா! எப்படிச் சொல்வேன்? சொல்வதற்கு வார்த்தைகள் எனக்குக் கிடைக்கவில்லை! கண்ணுக்கெட்டிய தூரம் மணிமுடி தரித்த மன்னர்கள் அணிவகுத்து நிற்கிறார்கள். மந்திரிகளும், சாமந்தர்களும், அதிகாரிகளும் வரிசை வரிசையாக நிற்கிறார்கள். அவர்களுக்கு அப்பால், முடிவில்லாத கடலைப்போல், சேனா வீரர்கள் அலைமோதிக் கொண்டு நிற்கிறார்கள். அவர்கள் கையில் பிடித்த வேல்களும், வாள்களும் மார்பில் தரித்த கவசங்களும் ஒளி வீசிக் கண்ணைப் பறிக்கின்றன. தூரத்திலுள்ள மாட மாளிகைகளின் மேல் ஜனங்கள் நின்று ஆர்ப்பரிக்கிறார்கள். கோட்டை கொத்தளங்கள் மீதெல்லாம் மக்கள் கூட்டம் கூட்டமாய் நிற்கின்றனர். அவர்கள் அவர்கள் ஏதேதோ கோஷம் செய்கிறார்கள்!"

"சொல், சொல்! மக்கள் என்ன கோஷமிடுகிறார்கள்?"

"இளவரசே! பல்லாயிரம் மக்களின் கோஷமாகையால் நன்றாகக் கேட்கவில்லை. 'சோழக் குலத் தோன்றல் வாழ்க! திரிபுவன சக்கரவர்த்தி வாழ்க! மன்னாதி மன்னர் வாழ்க!' என்றெல்லாம் கோஷிப்பது போலத் தோன்றுகிறது."

"அப்புறம் என்ன?"

"மக்கள் திரண்டு கூட்டம் கூட்டமாக முன்னேறி வருகிறார்கள். வேலும் வாளும் பிடித்த வீரர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்துகிறார்கள். சிறிது நேரம் அங்கே ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருக்கிறது."

"சரி, சரி! கூட்டம் எதற்காகக் கூடியிருக்கிறது? அதைச் சொல்!"

"அதைத்தான் நானும் இப்போது பார்க்கப் போகிறேன். கூட்டத்தின் மத்தியில் புலிக்கொடி வானளாவிப் பறக்கிறது. அதற்குக் கீழே மீனக்கொடி, விற்கொடி, பனைக்கொடி சிங்கக்கொடி, ரிஷபக்கொடி, பன்றிக்கொடி ஆகியவை தாழ்வாகப் பறக்கின்றன. மயன் மாளிகையைப் போன்ற சபாமண்டபத்தின் நடுவிலே நவரத்தின கசிதமான தங்கச் சிங்காதனம் போட்டிருக்கிறது. அருகில் ஒரு பீடத்தில் கோடி சூரியப் பிரகாசமான வைர வைடூரியங்கள் பதித்த மணிமகுடம் ஒன்று வைத்திருக்கிறது. சிங்காதனத்துக்கு மேலே தண் மதியின் வெண்ணிலாவையொத்த குளிர்ச்சி பொருந்திய வெண்கொற்றக்குடை விரிந்து கவிந்திருக்கின்றன. தேவ கன்னியரைப் போன்ற பெண்கள் கைகளில் வெண்சாமரங்களை வைத்துக்கொண்டு காத்திருக்கிறார்கள்."

(தொடரும்)






## மரம்வெட்டியின் பேச்சைக் கேட்டு மோசம்போன சிங்கம்

ஒரு பெரிய காட்டிற்கு பக்கத்திலே ஒரு கிராமம் இருந்து வந்தது. அந்தக் கிராமமக்கள் தங்கள் உணவுக்கான தேவைகளை அருகில் இருந்த காட்டில் இருந்து எடுத்து தீர்த்து கொண்டார்கள்.

உதாரணமாக பழங்களைப் பறித்துக் கொள்ள மரங்களை வெட்டி விறகுகளை விற்று தங்களது அன்றாட வாழ்க்கையை வாழ்ந்து வந் தார்கள்.

மனிதர்கள் காட்டுக்குள் நடமாடுவது தெரிந்தும் விலங்குகளும் தங்களுடைய வாழ்க்கையை நேர்த்தியாக எந்த ஒரு சலனமும் இல்லாமல் வாழ்ந்து வந்தன. மக்கள் காட்டுக்குள் வந்தாலும் அவர்களை தாக்குவதில்லை. அதனால் மக்களும் விலங்குகளிடத்தில் எந்த அச்சமும் இல்லாமல் இருந்தார்கள். காட்டுக்குள் எப்போது வேண்டுமென்றாலும் போய் வந்தார்கள்.

விலங்குகளும் கிராமத்திற்குள் அவ்வப்போது நடமாடும். அந்த கிராமத்தில் ஒரு ஏழை மரவெட்டி வசித்து வந்தான். அவனுக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் தனது தந்தையுடன் விறகுகளை எடுத்துவர உதவியாக இருப்பாள். மிகவும் அழகானவள் மற்றும் அன்பானவள். ஒருநாள் தந்தையுடன் காட்டில் இருந்து விறகு எடுத்து வர சென்றாள். அப்போது அந்த பக்கமாய் சென்ற சிங்கம் மரம் வெட்டியின் மகளை கவனித்தது.

ஒரு நொடி நின்று அவளை பார்த்த சிங்கத்திற்கு அவளின் அழகின் மேல் ஆசை ஏற்பட, திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தது. மறுநாளே மரம் வெட்டியின் வீட்டிற்கு சென்று உன் மகளை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன் என பெண் கேட்டது.

பதறிப்போன மரவெட்டி, தன் பயத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் சிரித்து கொண்டே ஒரு காட்டின் அரசனே என் பெண்ணை திருமணம் செய்து கொள்ள ஆசைப் படுவதை நினைத்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் எனக்கு ஒரு நிபந்தனை இருக்கிறது என்றான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான எண்ணங்களால் உங்களைச் சுற்றி அரண் அமைத்துக்கொள்ளுங்கள்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாருக்கு வாக்களிப்பதென்பதை பொதுமக்கள் தீர்மானிப்பார்கள்

*எண்ணித்துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவாம் என்பது இழுக்கு*
என்பான் வள்ளுவன்.

எதையும் தீர ஆராய்ந்து தீர்மானங்களை எட்ட வேண்டும்.

தீர்மானங்களை எடுத்துவிட்டு பின்னர் ஆராயலாம் என்றால், அது தீரா இழுக்கைத் தந்து விடும்.

ஆக, நாளை விடிந்தால் ஜனாதிபதித் தேர்தல். இந்த நாட்டின் 9ஆவது ஜனாதிபதியைத் தீர்மானிக்கின்ற தேர்தல்.

அதிலும் பொருளாதாரப் பெருமந்தத்தை நாடு அனுபவித்துக் கொண்டிருக்கும்போது நடைபெறுகின்ற தேர்தல்.

இவ்வாறு நாடு பொருளாதாரப் பெருமந்தத்தை அனுபவிப்பதற்கு மூலகாரணம் இனவாதம் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

தவிர, வேலியே பயிரை மேய்ந்த கதையாக ஆட்சியாளர்கள் ஊழல் செய்தால் அந்த நாட்டின் நிலைமையைச் சொல்ல வேண்டுமா என்ன?

ஒருபுறத்தில் இனவாதம், மறுபுறத்தில் ஊழல் என இருபெரும் நோய் நாட்டின் பொருளாதார வேரை அறுத்துவிட, நாட்டு மக்கள் வறுமையிலும் பஞ்சத்திலும் வீழ்ந்து துன்பப்படலாயினர்.

இதை நாம் கூறும்போது, பேரினவாத சிந்தையும் ஊழல் மோசடியும் உடைய ஆட்சியாளர்களைத் தெரிவு செய்தது யார் என்று கேட்கும்போதுதான், இந்த நாட்டு மக்கள் தலைகுனிந்து நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகின்றனர்.

பரவாயில்லை. தாம் படைத்த ஆட்சியை தாமே அழிக்க வேண்டும் என்று மக்கள் நினைத்து அதனைச் செய்து முடித்தமை ஒரு பெரும் திருப்புமுனை எனலாம்.

இருந்தாலும் பிழையானவர்களை ஆட்சிக் கட்டிலில் அமர வைத்ததற்கான தண்டனையை ஒட்டுமொத்த மக்களும் அனுபவித்து வருகின்றனர்.

எனவே ஆட்சிக்குரியவர் யார்? அவரிடம் அறம் சார்ந்த சிந்தனை உண்டா? மக்கள் மீது கருசனை உண்டா? இனவாதத்தை, மதவாதத்தை வேரறுக்க வேண்டும் என எண்ணுகின்றாரா? நாட்டை அபிவிருத்தி செய்கின்ற தூரநோக்கு உடையவரா? நாட்டை நிர்வகிக்கின்ற ஆளுமை உள்ளவரா? உண்மை, நேர்மை, நீதி என்ற உயர்ந்த ஒழுக்கத்தை பின்பற்றுபவரா? என்றெல்லாம் சீர்தூக்கி ஆராய்ந்து அதன்படி வாக்களிக்கும்போது தான், நாட்டில் நீதியான ஆட்சி அமையும்.

அதேநேரம் மக்கள் தங்கள் உரிமை சார்ந்தும் தங்களின் நியாயத்துவம் சார்ந்தும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

ஆக, எதுஎவ்வாறாயினும் அவர் கூறிவிட்டார். இவர் கூறி விட்டார் என்றில்லாமல், நமக்கு எப்படியாக நம் அறிவு உரைக்கிறதோ! நம் மனச்சாட்சி வழிப்படுத்துகிறதோ! அதற்கு முதன்மை கொடுத்து எங்கள் வாக்குகளை வழங்குவோம். அதுவே பொதுமக்களாகிய எங்களின் அறமும் ஜனநாயகக் கடமையும் ஆகும்.

# பாதுகாப்பான சுமூகமான தேர்தல் இடம்பெற வழிவகை செய்யுங்கள்

## பாதுகாப்பு தரப்பிற்கு ஜனாதிபதி ரணில் பணிப்புரை

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் தேசிய பாதுகாப்பு சபையின் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் தேர்தல் கால பாதுகாப்புத் தொடர்பில் ஆராயப்பட்டதோடு ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் எதுவித குழப்பங்களும் இன்றி சுமூகமான முறையில் தேர்தல் இடம்பெற ஆவண செய்யுமாறும் பாதுகாப்பு தரப்பினருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், முறைகேடுகள் எதுவும் ஏற்படாத வண்ணம் வேட்பாளர்களின் பாதுகாப்பு மற்றும் வாக்குச்சாவடிகள், வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் பணிப்புரை விடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் காலப்பகுதியிலும்,

பொது மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை வழமைபோன்று முன்னெடுத்துச் செல்வதை உறுதிப்படுத்துமாறும் ஜனாதிபதி இந்தக் கூட்டத்தில் பாதுகாப்புதரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.(ம)

# ஜனாதிபதித் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

## கிளிநொச்சி அரசாங்க அதிபர் அறிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் வாக்கெண்ணும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் தொடர்பிலான கலந்துரையாடல் நடைபெற்றதையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு லட்சத்து தொள்ளாயிரத்து ஏழு வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி உடையவர்களாக உள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 108 வாக்களிப்பு நிலையங்களும் எட்டு வாக்கெண்ணும் நிலையங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இதுவரை தேர்தல் தொடர்பான பதினொரு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்வதற்கு 40 பேருந்துகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்புக் கடமைகளுக்காக 400 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தெரிவித்துள்ளார்.

(ம-7,315)

# மோ. சைக்கிள் விபத்து இருவர் படுகாயம்

(பளை)

பளை பொலிஸ் பிரிவுக்குற்பட்ட கிளாலி உள்வீதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதி மைல்கல்லுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் பளை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவமானது நேற்று பிற்பகல் 5.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் முகமாலைப்பகுதியைச்சேர்ந்த 34மற்றும் 25வயதுடையவர்களே படுகாயம் அடைந்துள்ளனர்.

விபத்துத் தொடர்பாக பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,316)

# சிறுகதை நூல் வெளியீடு

நவமகனின் ஆகிதம் எனும் சிறுகதைப் புத்தக வெளியீட்டு நிகழ்வானது இன்று வெள்ளிக்கிழமை (20) மாலை 3.30 மணி முதல் கலைமகள் வீதி, உடுப்பிட்டி இமையாணன் பகுதியில் அமைந்துள்ள கல்வி, கலைப்பண்பாட்டு வளாகத்தில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் தானா விஷ்ணு தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் எழுத்தாளர்களான நவமகன், யாத்திரிகன், கருணாகரன், இராஜேஸ்கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு உரைகள் ஆற்றவுள்ளனர்.(ம-7)

# கால்நடைகள் திடீர் இறப்பு

## உடற்கூற்று மாதிரிகள் ஆய்வுக்கு

கிளிநொச்சியில் கால்நடைகள் திடீர் இறப்பு வீதம் அதிகரித்தமையால் இறப்புக்கான காரணத்தை அறிய மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக கண்டிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுக்குற்பட்ட கௌதாரி முனைப் பகுதியில் அண்மை நாட்களாக மாடுகள் இறந்து வருகின்ற சம்பவம் அதிகரித்த நிலையில் இதுவரை 13 கால்நடைகள் இறந்துள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றும் ஒரு மாடு இறந்த நிலையில் குறித்த இறப்பிற்கான காரணத்தை அறியும் நோக்கில் மாவட்ட விலங்கு புலனாய்வு அதிகாரிகள் இறந்த குறித்த மாட்டினுடைய மாதிரிகளைப் பெற்று அவற்றைக் கண்டிக்கு ஆய்வுக்காக அனுப்புவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

(ம-7,316)

# துப்பாக்கிச் சூடு மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டின் 3 வெவ்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் மூவர் உயிரிழந்ததுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

இதன்படி, வெலிகமமிதிகம பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளர் உயிரிழந்தார்.

இதன்போது காயமடைந்த மேலும் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் 37 வயதான ஒருவரே உயிரிழந்தார்.

அதேநேரம், நிகவரட்டிய ரஷ்னாயனபுர பகுதியில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 30 வயதான ஒருவர் உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கொஹூவல சரணங்கர வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அந்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் உயிரிழந்தார்.

உந்துருளியில் பிரவேசித்த இனந்தெரியாத இருவர், துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் தெஹிவளைப் பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட் டுச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்

## ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

16

● வேலையற்றோருக்கான காப்புறுதி - பிரிவு 91(2a) - இப்பிரிவு 1940 ஆம் ஆண்டின் அரசியல் யாப்புச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

● வரிவிதிப்பு - பிரிவு 91(3). இப்பிரிவு எம்முறையிலோ, வகையிலோ வரிவிதிக்கும் அதிகாரத்தைச் சமஷ்டி அரசுக்கு வழங்கியது.

● இந்தியர்களும், இந்தியர்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளும் - பிரிவு 91(24) (இந்தியர் என்பது பழங்குடிகளைக் குறிப்பது).

● உடன்படிக்கைகளைச் செய்யும் அதிகாரம் - பிரிவு 132. இப்பிரிவு சர்வதேச உடன்படிக்கைகளைச் செய்யும் அதிகாரத்தை சமஷ்டி அரசாங்கத்திற்கு வழங்கியது. உடன்படிக்கை மாகாணங்களின் நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட விடயமாயின் மாகாணங்கள் அவ் உடன்படிக்கையை ஏற்று அங்கீகரிக்கும் வரை செயற்பாடுடையதாகாது.

● பணமும் வங்கிகளும் பற்றிய அதிகாரம், மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து அதிகாரம்.

**மாகாணங்களுக்கு உரிய அதிகாரங்கள்**

1867 ஆம் ஆண்டின் அரசியல் அமைச்சுச் சட்டம் 92 விடயங்களை மாகாணங்களுக்கு உரியன எனக் குறிப்பிட்டுள்ளது. அவற்றுள் மிக முக்கியமானவை பின்வருவன.

● நேரடி வரிகள் - பிரிவு 92 (2)
இப் பிரிவு நேரடி வரிகள் (DIRECT TAXES) மாகாணத் தேவைகளுக்கான வருமானத்தைப் பெறும் அதிகாரத்தை மாகாணங்களுக்கு வழங்கியது.

● அரசாங்க காணிகளின் விற்பனையும் முகாமை செய்தலும் - பிரிவு 92(5) - மாகாணத்தில் உள்ள காணிகளும் அரசாங்க காணிகளும் இயற்கை வளங்களும் அம்மாகாணத்தின் சொத்தாகும். இவற்றின் மூலம் குறிப்பிடத்தக்களவு அரச வரிகள் வருவாய் கிடைப்பதோடு, இவ் வரிவருவாய் மாகாணத்தின் பொருளாதாரத்தை இயக்குவதற்கு உபயோகமாகிறது.

● சுகாதாரமும் நலன்புரி சேவைகளும் - பிரிவு 92(7) - இது 20 ஆம் நூற்றாண்டில் முக்கியத்துவம் பெற்ற ஒரு துறையாகும். இன்று சுகாதாரப் பராமரிப்பு மாகாண அரசாங்கங்களுக்குப் பெரும் செலவை ஏற்படுத்துவதாக உள்ளது.

● மாநகரசபை நிறுவனங்கள் - பிரிவு 92(9) - அதாவது மாநகரசபை அரசாங்கங்களை மாகாண அரசாங்கங்கள் ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும்.

● பிரதேசப் பணிகளும் நடவடிக்கைகளும் - பிரிவு 92(10).

● மாகாணத்தினுள் சொத்துரிமைகளும் குடியியல் உரிமைகளும் — பிரிவு 92(13). மாகாணங்களின் அதிகாரங்களில் இதுவே முக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது. ஏனெனில் மாகாணங்கள் இப்பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களை உபயோகித்து காணிச் சொத்துக்கள், குடியியல் உரிமைகள் ஆகியன தொடர்பாக தத்தமது மாகாணங்களுக்குரிய சட்டங்களை இயற்றலாம்.

● உள்ளூர் சார்ந்த தனியாள் சார்ந்த விடயங்கள் - பிரிவு 92 (16). இது மாகாண அதிகாரத்தின் இன்னொரு மூலமாகக் கருதப்படுகிறது. உள்ளூர் சார்ந்த அல்லது தனிநபர் சார்ந்த விடயங்களுடன் தொடர்புடையவை. மேலும் மாகாணங்களின் வேறு அதிகாரங்களுடன் குறிப்பிட்டு சொல்லப்படாதவற்றுடன் இது தொடர்புடையதாக இருக்கின்றது.

**ஒருங்கிணை அதிகாரங்கள்**
**(CONCURRENT POWERS)**

ஒருங்கிணை அதிகாரங்கள் நான்கு உள்ளன.

● முதலாவது ஒருங்கிணை அதிகாரமாக குறிப்பிடத்தக்கது விவசாயமும் குடிவரவும் (பிரிவு 95) ஆகும். 95 ஆம் பிரிவு இவ்விடயங்கள் சம்மந்தமாக சமஷ்டி பாராளுமன்றமும் மாகாண பாராளுமன்றங்களும் சட்டம் இயற்றலாம் எனக் குறிப்பிடுகின்றது. முரண்பாடு ஏற்படுமிடத்து சமஷ்டி சட்டமே வலிதுடையதாகும்.

● இரண்டாவது ஒருங்கிணை அதிகாரம் இயற்கை வளங்களுடன் தொடர்புடையது. பிரிவு 92 A. 1980-92 காலத்தில் அரசியல் யாப்பு தொடர்பான உரையாடல்கள் இடம்பெற்றன. அதன் பயனாக இப்பிரிவு 92(A) சேர்க்கப்பட்டது.

இப்பிரிவின் அதிகாரத்தை உபயோகித்து மாகாணங்கள் தமது பகுதியின் புதுப்பிக்கப்பட முடியாத வளங்கள், வனவளம், மின்சாரவளம் என்பன பிற மாகாணங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதைக் கட்டுப்படுத்தலாம். முன்னர் மாகாணங்கள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை இப்பிரிவு நீக்கி விட்டது. இவ்விடயத்திலும் முரண்பாடு ஏற்படுமிடத்து சமஷ்டி பாராளுமன்றச் சட்டமே வலிதுடையதாகும்.

● மூன்றாவது ஒருங்கிணை அதிகாரம் கல்வி பற்றிய பிரிவு 93 ஆகும். கல்வி தொடர்பாக சமஷ்டி பாராளுமன்றத்திற்கு உரிய அதிகாரம் பொதுவானது அன்று. விசேட சூழ்நிலைகளின் போது (SPECIAL SITUATIONS) சம்பந்தப்பட்டதே இதுவாகும். கல்வி மாகாணங்களிற்குப் பொறுப்பான அதிகாரமாகும்.

சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகள் சமயப் பாடசாலைகள் ஆகியவற்றின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இவ்வுரிமை வழங்கப்படுகிறது. இதன்படி மாகாணங்களின் அதிகாரத்தில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

கல்வி தொடர்பாக சமஷ்டி பாராளுமன்றம் குறைதீர் சட்டவாக்கத்தையும் (REMEDIAL LEGISLATION) கொண்டு வரலாம். ஆயினும் இவ் அதிகாரம் இதுவரை உபயோகிக்கப்படவில்லை.

20 ஆம் நூற்றாண்டின் நவீன ஜனநாயக அரசாக கனடா வளர்ச்சியுற்றுள்ள நிலையில் சுகாதாரம், நலன்புரி சேவைகள் போன்று கல்வியும் மிக முக்கியமான பொறுப்பாக மாறியுள்ளது. உலகின் சமஷ்டிகளுள் கனடா, சமஷ்டி அரசாங்கத்திற்கு குறைந்தளவு அதிகாரங்களை வழங்கும் சமஷ்டி முறையாக விளங்குவது ஒரு வழமைக்கு மாறான சிறப்பாகும்.

● நான்காவது ஒருங்கிணை அதிகாரம் ஓய்வூதியம் தொடர்பான 94 (a) ஆகும். இப்பிரிவு 1951 இல் புதிதாகச் சேர்க்கப்பட்டது. பின்னர் 1964 இல் திருத்தம் செய்யப்பட்டது. இது முதிய வயது ஓய்வூதியம் அதற்குத் துணையான மேலதிக நன்மைகள் பற்றிய அதிகாரமாகும்.

மாகாணச் சட்டங்களுக்கும் சமஷ்டிச் சட்டங்களுக்கும் முரண்பாடு ஏற்படுமிடத்து இவ் விடயத்தில் மாகாணச் சட்டங்களே வலிதுடையனவாகும் என்று குறிப்பிட்டிருப்பது வழமைக்கு மாறானது.

**மேவுகை (OVERLAP) ஏற்படும்**
**மாகாணச் சட்டவாக்க உரிமைகளும்**
**சமஷ்டி சட்டவாக்க உரிமைகளும்**

மேற்குறிப்பிட்டவற்றை விட மாகாணச் சட்டவாக்க உரிமைகளும் சமஷ்டி சட்டவாக்க உரிமைகளும் மேவுகை ஏற்படும் மூன்று விடயங்கள் உள்ளன.

முதலாவது, குற்றவியல் சட்டம் தொடர்பான பிரிவு 91 (27) ஆகும். இப்பிரிவு சமஷ்டி பாராளுமன்றத்திற்கு குற்றவியல் தொடர்பான சட்டங்கள், அதன் நடைமுறை (CRIMINAL PROCEDURE) என்பன பற்றி சட்டமியற்றும் அதிகாரத்தை வழங்குகிறது.

ஆயினும் பிரிவு 92 (14) மாகாணங்களுக்கு நீதி நிர்வாக அதிகாரத்தை (ADMINISTRATION OF JUSTICE) வழங்குகிறது. ஆகவே குற்றவியல் சட்டக்கோவை சமஷ்டி அரசாங்கத்தின் சட்டமாகவும், காவல் பணியும் (POLICING) வழக்குத் தொடுத்தலும் (PROSECUTION) மாகாணங்களால் பிரிவு 92(14) மூலம் நிறைவேற்றப்படுவனவாகவும் உள்ளன.

இரண்டாவது, நீதிமன்றுகள் தொடர்பானவை. கனடா ஒன்றிணைந்த நீதி முறைமையை உடையதாய் விளங்குகிறது. சமஷ்டி அரசாங்கம் உயர்நீதிமன்றுகளின் நீதிபதிகளது நியமனம், சம்பளம், படிகள், ஓய்வூதியம் என்பனவற்றிற்குப் பொறுப்பாக உள்ளது. மாகாண அரசாங்கங்கள் நீதிமன்றுகளைத் தாபித்தல் அவற்றின் நிர்வாகம் என்பனவற்றிற்குப் பொறுப்பாக உள்ளன. ஒவ்வொரு மாகாணத்தினதும் கீழ்நிலை நீதிமன்றங்களின் நிர்வாகமும் அந்தந்த மாகாணத்திடமே உள்ளது.

மூன்றாவது ஒருங்கிணை அதிகாரம் சமஷ்டி அரசாங்கத்தின் செலவிடும் அதிகாரமும் (SPENDING POWER) பகிரப்பட்ட செலவுத் திட்டங்களுமாகும். பகிரப்பட்ட செலவுத்திட்டத்தின்படி சமஷ்டி அரசாங்கம் மாகாண அரசுகளுக்கு அவற்றின் அரசியல் யாப்புப் பொறுப்புக்கள் சிலவற்றை நிறைவேற்றுவதற்குரிய நிதியை வழங்குகிறது.

இது பெரும் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்து வருகிறது. சுகாதாரம், சமூக உதவி, இரண்டாம் நிலைக் கல்விக்குப் பிந்திய கல்வி என்பன இவற்றுள் பெரும் செலவுத் திட்டங்களாகும். இவை தற்போது கனடா சுகாதார சமூக மாற்றத் திட்டத்தில் (CANADA HEALTH AND SOCIAL TRANSFER PROGRAM) இணைக்கப்பட்டுள்ளன.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை...

கதிரைகள் மற்றும் மண்டப வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஒவ்வொரு பாடசாலைக்கும் தொடர்புடைய காலப் பகுதியில் மாத்திரம் வாக்கு எண்ணும் நிலையங்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகள் மூடப்படும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

அதேவேளை வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகள் எனச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பாடசாலையும் அந்தந்தக் காலப்பகுதியில் மட்டும்மூடப்படும்எனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## பால் புரைக்கேறி...

மாக யாழ்ப்பாண வைத்தியசாலையில் கண்காணிப்பில் இருந்த நிலையில் கடந்த 12ஆம் திகதி வியாழக்கிழமை காலை உயிரிழந்துள்ளது.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் நேற்று வியாழக்கிழமை விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் பால் புரைக்கேறி மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

## பிறந்து...

செவ்வாய்க்கிழமை காலை பெண் குழந்தை ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையில் பிறந்துள்ளது.

இந்நிலையில் மறுநாள் 18ஆம் திகதி சிசு உயிரிழந்துள்ளது.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## தொகுதி மட்டத்...

இவ்வாறு கூறினார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு பிரதான அலுவலகமும் பழைய தொகுதிக்கு ஒரு அலுவலகமும் மாத்திரமே திறக்கப்பட முடியும். ஏற்கெனவே நிறுவப்பட்ட ஏனைய அனைத்து அலுவலகங்களையும் அந்தந்த வேட்பாளர்கள் அகற்ற வேண்டும் என்பதுடன் அவ்வாறு அகற்றாவிட்டால் பொலிஸார் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்குகளை எண்ணும் பணி தேர்தல் தினத்தன்று பிற்பகல் 4.15 மணிக்கு ஆரம்பமாகும். எண்ணும் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து உரிய முடிவுகளை ஊடகங்களுக்கு வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

உத்தியோகபூர்வ முடிவுகள் கிடைக்கப்பெறும்வரை உத்தியோகபூர்வமற்ற முடிவுகள் வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்றார். (ம-7)

## டிப்பர் மோதியதில்...

கண்டி பாலத்துக்கு அருகாமையில் நேற்று அதிகாலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த இளைஞன் வீதியால் சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனம் மோதிய நிலையில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தை ஏற்படுத்திய வாகனம் மற்றும் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விபத்துத் தொடர்பாகக் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காகக் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7, 315,316)

## 21, 22ம்...

யங்களையும் மூடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

எனினும், மூன்று நட்சத்திர வகுப்பு வரம்பிற்கு அப்பால் உள்ள சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் சொகுசு விடுதிகள் மேற்கண்ட உத்தரவில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்தில் தங்களுடைய விருந்தினர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு சேவை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கலால் திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 1913, கலால் கட்டளைச் சட்டத்தை மீறும் சந்தர்ப்பங்கள் தொடர்பில் பொதுமக்கள் முறைப்பாடுகள் மற்றும் தகவல்களை வழங்கலாம்.

அவசர தொலைபேசி இலக்கம் 24 மணிநேரமும் சேவையில் இருக்கும் என்று கலால் திணைக்களத்தின் பேச்சாளர் சன்ன வீரக்கொடி தெரிவித்தார். (ம-7)

## கட்டாயம்...

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, "ஜனாதிபதித் தேர்தலை நீதியாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

எனவே, செப்ரெம்பர் 21 ஆம் திகதி இயலுமானவரை காலை வேளையிலேயே சென்று வாக்குரிமையைப் பயன்படுத்திவிடுங்கள்.

வாக்களித்த பின்னர் வீடுகளுக்குச் செல்லுங்கள். தேர்தல் விதி மீறல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் வாக்களிப்பின்போது வாக்குச்சீட்டை படமெடுத்தல், வீடியோ எடுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளும் தடை செய்யப்பட்டுள்ளன" என்றார். (ம-7)

## தேர்...

தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருக்கின்றன என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் தனது விருப்பு வாக்கை சரியாகக் குறிப்பிடுவது தொடர்பிலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க விளக்கமளித்துள்ளார்.

ஒரு வேட்பாளருக்கு தனது வாக்கை அளிக்கவும், அதனைத் தொடர்ந்து ஏனைய இரு வேட்பாளர்களுக்கு இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்பு வாக்கையும் அளிக்கமுடியும்.

நீங்கள் விரும்பும் வேட்பாளருக்கு வாக்களிக்க விரும்பினால், வேட்பாளரின் பெயர் மற்றும் சின்னத்தின் முன் பகுதியில் "1" என்ற எண்ணைக் குறிக்க வேண்டும்.

அதன்பின்னர் "2" மற்றும் "3" என்ற எண்களைக் குறிப்பிட்டு, தனக்கு விருப்பமான ஏனைய வேட்பாளர்களுக்கு இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்ப வாக்கை அளிக்கலாம்.

வாக்காளர் எக்ஸ் (X) என மட்டுமே குறிப்பிட்டிருந்தால் அது வேட்பாளருக்கு அளிக்கப்பட்ட வாக்காகக் கருதப்படும்.

**நிராகரிக்கப்படும் விருப்புத் தேர்வுகள்**

01. எந்த வேட்பாளருக்கும் எந்த வாக்கும் குறிக்கப்படாதபோது.

02. ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு தவறான முறையில் வாக்குகள் குறிக்கப்படும் போது.

03.ஒரு வேட்பாளருக்கு "1" மற்றும் மற்றொரு வேட்பாளருக்கு "X" குறிக்கப்பட்டால் அது செல்லுபடியற்ற வாக்காக மாறும்.

04.இரண்டாவது விருப்பம் அல்லது மூன்றாவது விருப்பம் மட்டுமே குறிக்கப்படும்போதும் செல்லுபடியற்ற வாக்காக மாறும்.

05.வாக்காளரை அடையாளப்படுத்த ஏதாவது எழுதுவது அல்லது வரைதல்.

06."2" மற்றும் "3" ஆகியவை "1" தவிர வேறு ஒரு குறியுடன் முன்னுரிமையாகக் குறிக்கப்படும்போது.

07.வாக்குகள் மற்றும் விருப்புத் தேர்வுகள் 1, 2, 3க்கு மேல் குறிக்கப்படும்போது, இவ்வாறான சந்தர்ப்பங்களில் விருப்புத்தேர்வுகள் நிராகரிக்கப்படும். (ம-7)







































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் விசேட பாதுகாப்புக்கு ஏற்பாடு

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

வாக்குப்பதிவு தினத்தன்று நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் லியானி குணதில தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலின் போது நடைமுறைப்படுத்தப்படவுள்ள இறுதிபாதுகாப்பு வேலைத்திட்டம் பொலிஸ் திணைக்களம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு முப்படையினர் இணக்கம்தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைகள் ஏற்படக்கூடிய பகுதிகளுக்கு மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு முப்படையினர் தயார் நிலையில் உள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை வாக்குப்பதிவு தினத்தன்று நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# ஐஸ் போதைப்பொருளுடன் காதல் ஜோடி கைது

(கொழும்பு)

பெலும்மஹர வெலிவேரிய வீதி பகுதியிலுள்ள விடுதியொன்றின் அறையொன்றில் போதைப்பொருளை பொதி செய்து கொண்டிருந்த காதல் ஜோடி கைது செய்யப்பட்டுள்ளதாக யக்கல பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் நேற்று வியாழக்கிழமை (19) கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பகஸ்பிட்டிய, கந்தமுல்ல பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதுடைய ஒருவரும் அவிசாவளை மீகஹா கொடல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடையவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர் ஹிரியால பொலிஸாரினால் இதற்கு முன்னர் போதைப்பொருள் குற்றச்சாட்டில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரிடம் இருந்து 26 கிராம் 250 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் மற்றவரிடம் இருந்து 3500 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.(ம-7)

## யாழ்.மாவட்ட...

யாழ்ப்பாண மாவட்டத்தில் 492,280 வாக்காளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 100,907 வாக்காளர்களுமாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 593,187 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். யாழில் 511 வாக்கெடுப்பு நிலையங்களும் கிளிநொச்சியில் 108 வாக்கெடுப்பு நிலையங்களும் என 619 வாக்கெடுப்பு நிலையங்கள் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் பதில் மாவட்ட செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தெல்லிப்பழையினைச் சொந்த இடமாகக் கொண்டு பருத்தித்துறையில் தற்காலிகமாக வசித்து வருகின்றவர்களை வியாபாரிமூலையிலிருந்து தெல்லிப்பழையில் வாக்களிப்பதற்கு போக்குவரத்து பேருந்துகள் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் கடமைக்காக 8,232 உத்தியோகத்தர்கள் மற்றும் 2,100 பொலிஸாரும் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை மூலம் 42 பேருந்துகளும், தனியார் போக்குவரத்துச் சங்கம் மூலம் 132 பேருந்துகளும் தேர்தல் கடமைகளுக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் வாக்களிப்பு நிறைவடைந்த பின்னர் வாக்குப் பெட்டிகள் உலங்குவானூர்தி மூலம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு கொண்டு வரப்படும்.

சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வாக்குப் பெட்டி, வாக்குச் சீட்டு, இதர ஆவணங்கள் விநியோகித்தல் நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இன்று (20) காலை 07 மணிக்கு ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. முதலாவது பேருந்து காலை 08.30 மணியளவில் புறப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பெறுபேற்றினை தயாரித்து வெளியிடும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள 511 வாக்களிப்பு நிலையங்களினதும் வாக்குகளை எண்ணுவதற்காக, 41 வாக்கெண்ணும் நிலையங்களும், அஞ்சல் வாக்குகளை எண்ணுவதற்காக 14 வாக்கெண்ணும் நிலையங்களுமாக மத்திய கல்லூரியில் 55 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7,33)

## தேர்தலை...

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு முழுவதும் பொலிஸார் மற்றும் முப்படையினர் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. நாடு முழுவதும் தேர்தல் கடமைகளுக்காக 63ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்தில் பொலிஸார், முப்படையினர் மற்றும் புலனாய்வுத்துறையினர் இணைந்து விசேட செயற்பாட்டு மையமொன்றை உருவாக்கியுள்ளனர்.

இந்த மையம் தேர்தல்கள் திணைக்களம் மற்றும் ஆணைக்குழுவுடன் இணைந்து பணியாற்றும் என்றார். (ம-7)

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாணத்தில் வீட்டில் தங்கி இருந்து பணி செய்யக்கூடிய 45 வயதுக்கு உட்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு :

077 070 7790

(1986)

**சிவபூமி முதியோர் ஆச்சிரமம் கீரிமலை**

**பணியாளர் வெற்றிடம்**

எமது கீரிமலை முதியோர் ஆச்சிரமத்திற்கு மேற்பார்வையாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் தேவை.

விண்ணப்பிக்க விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை கீழ் குறிப்பிட்ட தபால் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு 25.09.2024 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

தங்கியிருந்து பணியாற்ற விரும்புவோருக்கு தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படும்.

சிவபூமி அறக்கட்டளை,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

sivapoomi@gmail.com

T.P : 075 844 8787 (Whatsapp)

(1979)

**இந்தியன் விசா சேவைகள்**

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்

42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

(3551)

**காணி விற்பனைக்கு**

A9 வீதியை அண்மித்து நாவற்குழி சந்திக்கு அருகாமையில் 4 பரப்புக் காணிகள் இரண்டு விற்பனைக்குண்டு.

(+94)772897881

(1978)

**பதவி வெற்றிடம்**

• பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (பகல் கடமை)

(சாதாரண தரம் கற்றிருத்தல், பெண்கள்)

பொருத்தமானவர்கள் நேரில் அல்லது

076 097 3121 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். | பொது முகாமையாளர், வலம்புரி நாளிதழ்.

**Village Hotel**

**Bus Booking (A/C Bus)**

பருத்தித்துறை ⟶ கொழும்பு

யாழ்ப்பாணம் ⟶ கொழும்பு

இருவழிச் சேவை. (இரவு/ பகல்)

தொடர்புகளுக்கு:

077 544 8503

(1868)

**Care Giver - பராமரிப்பாளர்**

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.

(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)



CIMS College

49A, [illegible]

(C-1219)

College Of International Migration Skills

0777 068 [illegible] 0777 719 322

**V2 VISA SERVICES**

**கனடா**

077 77 20 322

077 77 19 322

Visit Visas

Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

• Student Visas • Online Appointments

• இந்தியா Visas • Online Visas - All countries

• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-12[illegible])

**வேலையாள் தேவை**

யாழ். நகரில் இயங்கிவரும் பிரபல்ய தனியார் கல்வி நிறுவனத்திற்கு Computer வேலை தெரிந்த பெண் ஊழியர் மற்றும் ஆண் சிற்றூழியர் தேவை.

077 791 7611

(C-1218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.